**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 9.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- தொழில் நுட்பங்கள் மூலம், பசுமை எரிசக்தி துறையை லாபகரமானதாக மாற்ற முக்கிய கவனம் செலுத்தப்படுவதாக புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறி உள்ளார்.
- துணை வேந்தர் நியமனம் தொடர்பான புதிய விதிமுறைகளை பல்கலைக்கழக மானியக் குழு விலக்கிக் கொள்ள வேண்டும் எனக் கோரி தமிழக சட்டமன்றத்தில் இன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், வரும் 16-ஆம் தேதி காரைக்காலில். காரைக்கால் கார்னிவல் கலை விழாவை தொடக்கி வைக்கிறார்.

<u>ே□ாடி-திவஸ்</u>

2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில், வெளிநாடு வாழ் இந்தியர் தின மாநாட்டை, முறைப்படி தொடக்கி வைத்து உரையாற்றிய

அவர், இந்தியாவின் வளர்ச்சி மட்டுமின்றி, உலக அளவிலான வளர்ச்சியிலும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் முக்கிய பங்காற்றி வருவதாக கூறினார். உலகிற்கான இந்தியாவின் தூதுவர்களாகவே வெளிநாடு வாழ் இந்தியர்கள் செயல்பட்டு வருவதாகவும், வெளிநாடு வாழ் இந்தியர்களின் சாதனைகளால் நாடே பெருமிதம் அடைவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்திய கலாச்சார மாண்புகள் உலக அளவில் மரியாதை பெற்று வருவதற்கு, வெளிநாடு வாழ் இந்தியர்களே காரணம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் உலகத் தலைவர்கள் பலரை தாம் சந்தித்து இருப்பதாகவும் இவர்கள் அனைவருமே வெளிநாடு வாழ் இந்தியர்களை பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக, வெளிநாடு வாழ் இந்தியர் தின மாநாட்டின் தொடக்க விழாவில் பிரதமர் கூறினார். புதுப்பிக்க வல்ல எரிசக்தி, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா வேகமாக முன்னேறி வருவதாகவும், விரைவிலேயே வெளிநாடு வாழ் இந்தியர்கள், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானம் மூலம் தாயகத்திற்கு வந்து செல்ல முடியும் என்றும் கூறினார்.

இந்தியாவின் மக்கள் தொகையில் இளைஞர்கள் அதிகம் என்பதால், இளைஞர்களின் உள்ளாற்றலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவே திறன் மேம்பாட்டு திட்டங்களில் அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் தெரிவித்தார். இன்றைய தினம், மகாத்மாகாந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து தாயகம் திரும்பிய நாள் என்பதை பிரதமர் சுட்டிக்காட்டி, நாட்டில் விரைவிலேயே பொங்கல் உள்ளிட்ட பண்டிகைகள் வரவிருப்பதால், பண்டிகை காலத்தில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் தாயகத்தில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றார்.

ே□ாடி-திவஸ்

வெளிநாடு வாழ் இந்தியர் தின மாநாட்டின் ஒரு பகுதியாக. மத்திய அரசு,மற்றும் ஒடிசா மாநில அரசின் பல்வேறு துறைகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை, விழாவின் போது பிரதமர் திறந்து வைத்தார். வெளிநாடு வாழ் இந்தியர்களின் புனித யாத்திரைக்கான பிரவாசி பாரதீய எக்ஸ்பிரஸ்-சிறப்பு ரயிலை, மெய்நிகர் முறையில் அவர், கொடி அசைத்து தொடக்கி வைத்தார். டெல்லி நிஜாமுதீன் ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் இந்த ரயில், 3 வார பயணத்தில், வெளிநாடு வாழ் இந்தியர்களை நாட்டின் பல்வேறு புனித தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்துச் செல்லும்.

மத்திய அமைச்சர்கள் டாக்டர் ஜெய்சங்கர், திரு ஜுயல் ஓராம், திரு அஸ்வினி வைஷ்ணவ், ஒடிசா ஆளுநர் திரு ஹரிபாபு கம்பம்பதி, மாநில முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கட்கரி

நாட்டின் மோட்டார் வாகன உற்பத்தி துறை, நாலரை கோடிக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை வழங்குவதால், பொருளாதார வளர்ச்சியில் இத்துறையின் பங்கு மிக முக்கியமானது என்று, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை போக்குவரத்து அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறி உள்ளார். இன்று மத்திய பிரதேஷ் மாநிலம் பிதம்பூரில், மோட்டார் வாகனங்களின் பரிசோதனைகளுக்கான நாட்ராக்ஸ்- தேசியக் தடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அவர் உரையாற்றினார். ஹைட்ரஜனே, எதிர்காலத்திற்கான எரிபொருள் என்பதால் அரசும் பல்வேறு மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனங்களும் ஹைட்ரஜன் எரிபொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். தற்போது எரிசக்தி இறக்குமதி நாடாக உள்ள இந்தியாவை, எரிசக்தி ஏற்றுமதி நாடாக மாற்றும் நோக்கத்துடன், மாற்று எரிசக்தி

ஆதாரங்களை அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக, அவர் மேலும் கூறினார்.

<u>எரிசக்தி</u>

2030-ஆம் ஆண்டிற்குள் நாட்டின் மொத்த மின்சார உற்பத்தி திறனில் 50 சதவிகிதத்தை, புதைபடிவம் அல்லாத எரிசக்தி ஆதாரங்களுக்கு மாற்றுவதான இந்தியாவின் இலக்கு, நீடித்த எதிர்காலம் பற்றிய பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப அமைந்திருப்பதாக, புதிய மற்றும் புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறி உள்ளார். புதுப்பிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்கள் பற்றிய இந்தியாவின் செயல் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது குறித்து மும்பையில் இன்று நடைபெற்ற பிராந்திய பயிலரங்கின் தொடக்க அமர்வில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். புதுப்பிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்கள் அதிகம் உள்ள நாடான இந்தியாவில், தொழில் நுட்ப வளர்ச்சி மூலம் பசுமை எரிசக்தி துறையை லாபகரமானதாக மாற்ற முக்கிய கவனம் செலுத்தப்படுவதாகவும் உலக அளவில் பசுமை எரிசக்தியின் தேவை அதிகரித்து வருவதை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் இந்தியா செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இணை அமைச்சர் திரு ஸ்ரீபத் யெஸ்ஸோ நாயக், இந்நிகழ்ச்சியில் பேசுகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ், நாட்டின் சோலார் மின்உற்பத்தி துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை பாராட்டினார். மகாராஷ்டிரா, குஜராத், கோவா உள்ளிட்ட மாநிலங்களின் புதுப்பிக்க வல்ல எரிசக்தி துறை அமைச்சர்களும் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*தமிழ்நாடு-தீர்□ானம்*

பல்கலைக் கழக துணை வேந்தர் நியமனம் தொடர்பான புதிய விதிமுறைகளை பல்கலைக்கழக மானியக் குழு விலக்கிக் கொள்ள வேண்டும் எனக் கோரி தமிழக சட்டமன்றத்தில் இன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இத்தீர்மானத்தை அவையில் கொண்டு வந்து பேசுகையில் பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு விதிமுறைகள் ஜனநாயக கொள்கைகளையும் மாநில அரசுகளின் அதிகாரத்தையும் மீறும் வகையில் அமைந்திருப்பதாக கூறினார். பிஜேபி சட்டமன்றக் குழுவின் தலைவர் திரு நைனார் நாகேந்திரன் தீர்மானத்தை ஆட்சேபித்துப் பேசுகையில் திருத்தங்களுக்கு பதில் அளிக்க மாநில அரசுகளுக்கு போதிய அவகாசம் இருப்பதாகவும் பிரச்சனை பற்றிய மாநில பிஜேபியின் கவலைகள் மத்திய அரசிடம் தெரிவிக்கப்படும் என்றும் கூறினார். தொடர்ந்து பிஜேபி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். பின்னர் தீர்மானம், அஇஅதிமுக, பாமக உள்ளிட்ட எதிர்கட்சிகளின் ஆதரவுடன் அவையில் நிறைவேற்றப்பட்டது.

*காரைக்கால்-சந்தை*

காரைக்காலில், மகளிர் சுயஉதவிக் குழுவினர் மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்கள் அடங்கிய பொங்கல் அங்காடி மற்றும் கிராமச் சந்தையை புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன் இன்று திறந்து வைத்தார். மாவட்ட துணை ஆட்சியர் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன் மற்றும் வட்டார வளர்ச்சித் துறை உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

***காரைக்கால் திருவிழா***

புதுச்சேரி அரசின் சுற்றுலாத்துறையும், கலை பண்பாட்டுத் துறையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, நடப்பாண்டிற்கான காரைக்கால் கார்னிவல் கலை விழா, காரைக்காலில், வரும் 16 முதல், 19-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. 16-ஆம் தேதியன்று மாலை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இவ்விழாவை தொடக்கி வைக்கிறார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்…………

(வாய்ஸ்)

*காரைக்கால் திருவிழா*

(வாய்ஸ்)

காரைக்காலில் நடைபெற உள்ள 4 நாள் காரைக்கால் கார்னிவல் விழாவின் ஒவ்வொரு நாளிலும், புகழ்பெற்ற பின்னணி பாடகர்கள், இசை அமைப்பாளர்கள், மற்றும் நாட்டுப்புற இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளும், புதுச்சேரி மற்றும் பல்வேறு மாநில கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன. 16-ஆம் தேதியன்று மதியம் காரைக்காலில், மாபெரும் கலாச்சார சாலை பவனியும் 17-ஆம் தேதி காரைக்கால் கடற்கரையில் நாய்கள் கண்காட்சியும் நடைபெறும். 18-ஆம் தேதியன்று மினி மராத்தான் போட்டியும், அன்றைய தினம் மாலை, கட்டுமரப் படகு போட்டியும் நடத்தப்படும். வரும் 14-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை காரைக்காலில், மாவட்ட அளவிலான கிரிக்கெட், கால்பந்து, கபடி, டென்னீஸ் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகளும் நடைபெறும் என காரைக்கால் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

__புதுச்சேரி ஆய்வு__

புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று காலை, அரியாங்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பணியில் உள்ளார்களா என்பதையும், நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் அடிப்படை வசதிகள் உள்ளதா என்பதையும் அவர் ஆய்வு செய்து, சிகிச்சையின் தரம் குறித்து நோயாளிகளிடம் கேட்டறிந்தார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்......................

(வாய்ஸ்)

__கூடுதல் பொறுப்பு__

முசோரியில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் வரும் 31-ஆம் தேதி வரை பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ள காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் பயிற்சி முடிந்து மீண்டும் பணியில் சேரும் வரை காரைக்கால் மாட்ட ஆட்சியர் பொறுப்பையும், காரைக்கால் மின்திறள் பொறுப்பையும், புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் கூடுதல் பொறுப்புகளாக கவனிப்பார் என புதுச்சேரி அரசு இன்று உத்தரவிட்டுள்ளது.

__குழந்தைகள் □ருத்துவ□னை__

புதுச்சேரி ராஜீவ்காந்தி அரசுப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு உணவு வழங்கத் தேவையான காய்கறிகள் மருத்துவமனை வளாகத்தின் பின்புறம் உள்ள இயற்கை வேளாண் தோட்டத்தில் விளைவிக்கப்படும் நிலையில், விளைச்சலைப் பெருக்குவதற்கான விதை நடவுப் பணிகள், மருத்துவ கண்காணிப்பாளர் திரு அய்யப்பன் தலைமையில், டஸ்டர் நிறுவன ஊழியர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் தொடர்பு அதிகாரி டாக்டர் குருபிரசாத் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

**<u>பேட்மிண்டன்</u>**

கோலாலம்பூரில் நடைபெறும் மலேசிய ஓபன் பேட்மிண்டன் சேம்பியன் போட்டித் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் எச் எஸ் பிரணாய், காலிறுதிக்கு முந்தைய சுற்றில், சீன வீரரிடம் தோல்வி அடைந்தார். மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் த்ரிசா ஜாலி-காயத்ரி கோபிசந்த் இணை, சீன இணையிடம் தோல்வி அடைந்து வெளியேறியது.

**<u>டிஜிட்டல்-கூடம்</u>**

டெல்லியில் உள்ள தேசிய அறிவியல் மையத்தில், அதன் 33-ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, புதிதாக நிறுவப்பட்டுள்ள, டிஜிட்டல் உலகம் என்னும் காட்சிக் கூடத்தை அறிவியல் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்படும் தேசிய இயற்பியல் மையத்தின் இயக்குநர் பேராசிரியர் வேணுகோபால் அச்சண்டா இன்று திறந்து வைத்தார். செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல் உள்ளிட்ட நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் கொரோனா தடுப்பூசி உள்ளிட்ட தொழில் நுட்ப வெற்றிகள் பற்றிய விளக்கப் பொருட்கள், இந்த காட்சிக் கூடத்தில் இடம் பெற்றுள்ளன.